# ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழியில் பேசுவோருக்காக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவை மூலம் வழங்கப்படுகின்ற சேவைகள் யாவை?

மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவையானது (தேசிய மொ.உ.சே.) ஆங்கிலம் பேச முடியாத மக்களுக்கும், மற்றும் ஆங்கிலம் தவிர்ந்த மொழியில் பேசக்கூடிய தமது வாடிக்கையாளருடன் தொடர்பாடலை மேற்கொள்ளத் தேவையான முகவரகங்கள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோருக்கும் உரைபெயர்ப்புச் சேவையை வழங்குகின்றது. இச்சேவையானது அவுஸ்திரேலியாவில் தகவல்கள் மற்றும் சேவைகளை சுயமாகப் பெற்றுக்கொள்வதற்கான வசதியை ஆங்கில மொழியில் பேச முடியாதோருக்கு வழங்குகிறது.

நாங்கள் 160 இற்கும் மேற்பட்ட பல்வேறு மொழிகள் மற்றும் வட்டார கிளை மொழிகளில் உரைபெயர்க்கக் கூடிய 2400 இற்கும் அதிமான உரைபெயர்ப்பாளர்களை ஒப்பந்த அடிப்படையில் கொண்டுள்ளோம்.

ஆங்கிலம் தவிர்ந்த மொழிப் பிரயோகமுடையோர் 131 450 எனும் இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துவதனூடாக தேசிய மொ.உ.சே. இன் அவசர தொலைபேசி மூல உரைபெயர்ப்பாளர்களை தொடர்புகொள்ள முடியும்.

மாறாக, நீங்கள் நிறுவனமொன்றை நேரடியாக தொடர்புகொள்வீர்களாயின், உங்கள் சார்பில் அவர்கள் உரைபெயர்ப்பாளர் ஒருவரை ஏற்பாடுசெய்து தரலாம்.

## என்னால் தேசிய மொ.உ.சே. ஊடாக யாரைத் தொடர்புகொள்ள முடியும்?

குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு திணைக்களம் உட்பட 22000 இற்கும் அதிகமான முகவரக வாடிக்கையாளர்கள் தேசிய மொ.உ.சே. யுடன் பதிவுசெய்துள்ளனர். அவ்வாறான ஏனைய முகவரக வாடிக்கையாளர்கள் பின்வருமாறு:

- அரச மற்றும் மத்திய அரசாங்கத் திணைக்களங்கள்
- உள்ளூராட்சி சபைகள்
- மருத்துவ மற்றும் சுகாதார மருத்துவர்கள்
- மருந்தாளர்கள்
- பயன்பாட்டுக் கம்பனிகள்
- தொலைத்தொடர்பாடல் கம்பனிகள்
- அவசர சேவைகள்
- சட்ட சேவைகள்
- குடியேற்றம் மற்றும் சமுதாய சேவை வழங்குனர்கள்

நீங்கள் தொடர்புகொள்ள விரும்பும் நிறுவனமானது தேசிய மொ.உ.சே. இலிருந்தான உரைபெயர்ப்பாளர்-உதவி அழைப்புகளை ஏற்பார்கள் என்பதற்கு தேசிய மொ.உ.சே. யினால் உத்தரவாதமளிக்க முடியாது.

## நான் தேசிய மொ.உ.சே. யை எப்போது அழைக்க முடியும்?

தேசிய மொ.உ.சே. யானது வருடத்தின் அனைத்து தினங்களிலும் 24 மணி நேர சேவையை வழங்குகிறது.

நீங்கள் தொடர்புகொள்ளும் நிறுவனமானது தனது வழக்கமான நேரங்களில் மாத்திரம் செயற்படலாம், மற்றும் அலுவலக நேரமானது நிறுவனங்களுக்கிடையில் வேறுபடக்கூடும்.

அவுஸ்திரேலியாவிலுள்ள பெரும்பாலான நிறுவனங்களின் நியம அலுவலக நேரமானது திங்கள் முதல் வெள்ளி வரையான நாட்களில் மு.ப. 9.00 இற்கும் பி.ப. 5.00 இற்கும் இடைப்பட்டதாகவிருக்கும். பெரும்பாலான நிறுவனங்கள் பொது விடுமுறை தினங்களில் செயற்படுவதில்லை.

## நான் 131 450 எனும் இலக்கத்திற்கு அழைக்கும் போது என்னால் எதனை எதிர்பாக்க முடியும்?

நீங்கள் தேசிய மொ.உ.சே. இற்கு தொலைபேசியூடாக அழைக்கும் போது, தேசிய மொ.உ.சே. யின் ஆங்கிலம் பேசும் தொலைபேசி இயக்குநர் ஒருவர் உங்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதோடு, உங்களுக்கு எந்த மொழியிலான உரைபெயர்ப்பாளர் வேண்டுமெனவும் வினவுவார்.

நீங்கள் உங்களுக்குரிய மொழி தொடர்பில் கோரிய பின்னர், பொருத்தமான உரைபெயர்ப்பாளர் இருப்பதை உறுதிப்படுத்தும் வரை நீங்கள் அழைப்பில் நிறுத்தி வைக்கப்படுவீர்கள். இவ்வேளையில் தொலைபேசியில் நிறுத்திவைப்பு நேர இசை ஒலிக்காமலிருப்பினும் தயவுசெய்து இணைப்பைத்துண்டிக்காது இருக்கவும்.

உங்களுக்குரிய மொழியிலான உரைபெயர்ப்பாளர் ஒருவர் காணப்படின், இயக்குநர் அந்த உரைபெயர்ப்பாளருடனான இணைப்பினை உங்களுக்கு ஏற்படுத்துவதோடு, எந்த நிறுவனத்துடன் நீங்கள் தொடர்புகொள்ள விரும்புகிறீர்கள் என உங்களிடம் வினவப்படும். எனவே, நீங்கள் தேசிய மொ.உ.சே. க்கு அழைப்பினை மேற்கொள்ளும் போது நீங்கள் தொடர்புகொள்ள விரும்பும் நிறுவனத்தின் பெயர், தொடர்பு இலக்கம் மற்றும் நிறுவனத்துடன் கொண்டுள்ள வாடிக்கையாளர் இலக்கம் அல்லது கணக்கு இலக்கம் என்பவற்றை தயாராக வைத்திருக்க வேண்டும்.

எமது இயக்குநர்கள், ஒரு நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிட்டு, நீங்கள் இந்த நிறுவனத்துடன் தொடர்பினை மேற்கொள்ளுங்கள் என பாரபட்சமான முறையில் பரிந்துரை செய்யமாட்டார்கள். உங்களின் அழைப்பு ஒரு உரைபெயர்ப்பாளருக்கு இணைக்கப்படும் போது, அவர் அனைத்து சம்பந்தப்பட்ட பணிகளிலும் பாரபட்சமின்றி செயற்படுவதோடு, அவ்வேளையில் அவர் உங்களுடன் முறைசாரா வித உரையாடலில் ஈடுபடமாட்டார்.

இப்போது, உரைபெயர்ப்பாளர் நீங்கள் தெரிவுசெய்த நிறுவனத்தின் பெயரை தேசிய மொ.உ.சே. யின் தொலைபேசி இயக்குநரிடம் கூறியதும், இயக்குநர் உங்களையும் உரைபெயர்ப்பாளரையும் சம்ந்தப்பட்ட நிறுவனத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி தொடர்பினை ஏற்டுத்துவார்.

நீங்கள் விரும்பும் மொழிக்குரிய உரைபெயர்ப்பாளர் இல்லையாயின், இன்னும் 10 நிமிடங்களின் பின்னர் மீண்டும் அழைப்பினை ஏற்படுத்துமாறு இயக்குநர் உங்களை வேண்டுவார். உங்களுக்கு வேறு சில மொழிகளில் பேச முடியுமாயின், நீங்கள் விரும்பினால் அத்தகைய மற்றுமொரு மொழிக்கான உரைபெயர்பபாளரை கோரலாம்.

## தேசிய மொ.உ.சே. யினால் எனக்கு இணைக்கப்பட்ட உரைபெயர்ப்பாளரைப் பற்றி நான் அறிந்திருப்பின், நான் யாது செய்ய வேண்டும்?

நீங்கள் இணைக்கப்பட்ட உரைபெயர்ப்பாளரைப் பற்றி அறிந்துள்ளீர்கள் என உணர்வீர்களாயின், அவரைக் கொண்டு உங்களுடைய உரைபெயர்ப்பு அமர்வினைத் தொடர்வதா என்பது உங்களுடைய தீர்மானமாகும்.

அவ் உரைபெயர்ப்பாளரைக் கொண்டு உங்களுடைய உரைபெயர்ப்பு அமர்வினைத் தொடர்வதற்கு உங்களுக்கு விருப்பமில்லையாயின், இணைப்பிலுள்ள அழைப்பினைத் துண்டிக்குமாறு தேசிய மொ.உ.சே. இயக்குநரிடமோ அல்லது நிறுவனத்திடமோ நீங்கள் வேண்ட முடியும்.

## நான் பாலின அடிப்படையில் ஒரு ஆண் அல்லது பெண் உரைபெயர்ப்பாளர் வேண்டுமெனக் கோர முடியுமா?

ஆம். நீங்கள் குறிப்பாக பாலின அடிப்படையில் உரைபெயர்ப்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்ய விரும்பினால், அதனை தேசிய மொ.உ.சே. இயக்குநரிடமோ அல்லது நிறுவனத்திடமோ தெரிவிக்கவும். அதனைத்தொடர்ந்து நீங்கள் விரைவாக இணைக்கப்படுவீர்கள். தேசிய மொ.உ.சேவையினர் நீங்கள் கோரிய பாலின உரைபெயர்ப்பாளரை கண்டுபிடித்து உங்களுக்கு வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வர்.

## என்னால் குறிப்பானதொரு மதம் அல்லது கலாசார பின்னணியிலுள்ளதொரு உரைபெயர்ப்பாளரை வேண்ட முடியுமா?

இல்லை. உரைபெயர்ப்பாளர்களை அவர்களது திறமைக்கு ஏற்பவும் மற்றும் அவர்களை தொடர்புகொள்ளக்கூடிய நிலைமைக்கேற்பவுமே தேசிய மொ.உ.சே. இயக்குநர்கள் அவர்களுக்கான பணிகளை ஒதுக்குவார்கள். எனவே, அவர்களின் மதம் அல்லது கலாசார பின்னணியின் அடிப்படையில் ஒரு உரைபெயர்ப்பாளரை தெரிவுசெய்ய முடியாது.

## நான் ஒரு உரைபெயர்ப்பாளரை நேரில் கொண்டு பயன்படுத்த விரும்பினால், அது சாத்தியமாகுமா?

ஆம், தேசிய மொ.உ.சேவையானது குறித்த அமர்வுக்கு நேரில் சமூகமளித்து மேற்கொள்ளும் உரைபெயர்ப்புச் சேவையினையும் வழங்குகிறது.

எனவே நேரில் சமூகமளிக்கும் உரைபெயர்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவையாயின், ஒரு தொலைபேசி மூல உரைபெயர்ப்பாளரைப் பயன்படுத்தி தேசிய மொ.உ.சேவையூடாக, நீங்கள் தொடர்பாடல் செய்ய வேண்டிய நிறுவனத்துடன் தொடர்புகொள்ள வேண்டும். அதனையடுத்து உங்களுக்கான நேரில் சமூகமளிக்கும் உரைபெயர்ப்பாளர் ஒருவரை ஏற்பாடு செய்து தருமாறு நீங்கள் கோர முடியும்.

## நான் ஒரு உரைபெயர்ப்பாளரைக் கொண்டு அவசர சேவைகளை தொடர்புகொள்ள வேண்டுமாயின், என்ன செய்ய வேண்டும்?

அவசர நிலையொன்றுக்கு அம்புலான்ஸ் வண்டி, பொலீஸ் அல்லது தீயணை சேவைகளைத் தொடர்புகொள்ளவதற்கு, நீங்கள் எப்போதும் 000 இற்கு நேரடியாக அழைக்கவும்.

மேற்படி 000 எனும் அவசர தொடர்புச் சேவையானது, ஒரு வாரத்தின் ஏழு நாட்களும், தினமொன்றுக்கு 24 மணி நேரமும் முன்னுரிமை அழைப்பு இணைப்பொன்றினூடாக தேசிய மொ.உ.சே. இற்கு அழைப்பை ஏற்படுத்தி ஒரு உரைபெயர்ப்பாளருடன் உங்களை தொடர்புபடுத்துகிறது.

## தேசிய மொ.உ.சே. இன் சேவைகள் ஆங்கிலம் தவிர்ந்த மொழியில் பேசுவோருக்கு இலவசமானதா?

ஆம். தேசிய மொ.உ.சே. யின் பெரும்பாலான உரைபெயர்ப்புச் சேவைகள் ஆங்கிலம் தவிர்ந்த மொழிப் பாவனையாளர்களுக்கு இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

பொதுவாக நீங்கள் தொடர்புகொள்ளும் நிறுவனங்கள் அதன் சேவைக்கான அணுகுகையினை உங்களுக்கு வழங்கும் நோக்கில் அச்சேவைக்கான கட்டணங்களை ஏற்றுக்கொள்வார்கள். சில நிறுவனங்களும் மருத்துவர்களும் தேசிய மொ.உ.சே. ஊடான இலவச உரைபெயர்ப்புக்கான தகைமையைக் கொண்டுள்ளன.

சில நிறுவனங்கள் தேசிய மொ.உ.சே. இலிருந்தான அழைப்புக்களை ஏற்காமல் விடலாம். எனினும், அத்தகைய நிறுவனங்களை நீங்கள் நெரில் தொடர்புகொண்டால், பின்னர் அவர்கள் ஒரு தொலைபேசி மூல உரைபெயர்ப்பாளருடன் உங்களை அழைக்கக் கூடும்.

நீங்கள் தேசிய மொ.உ.சே. யின் வாடிக்கையாளர் அல்லாத நிறுவனமொன்றைத் தொடர்புகொள்ள விரும்பினால், அந்த நிறுவனமானது தனது சேவைக்கான கட்டணங்களை ஏற்றுக்கொள்ள விரும்பாத பட்சத்தில், நீங்கள் பெற்ற சேவைக்காக கட்டணமொன்றைச் செலுத்துவதற்கு நீங்களாகவே முன்வரலாம். அவ்வாறாயின், இதனை நீங்கள் உரைபெயர்ப்பாளரிடம் தெரிவிப்பதோடு, எமது இயக்குநர்கள் தேசிய மொ.உ.சே. இல் உங்களுக்கான கணக்கொன்றை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வார்கள். இதன்போது கணக்கொன்றை உருவாக்குவதற்காக உங்களுடைய கடனட்டையின் விபரங்களை தேசிய மொ.உ.சே. யிடம் வழங்க வேண்டும்.

## ஒரு தேசிய மொ.உ.சே. உரைபெயர்ப்பாளரின் பங்களிப்பு யாது?

பேசப்படும் வார்த்தைகளை முடிந்தவரை துல்லியமாக உங்கள் மொழியில் உரைபெயர்ப்பதே உரைபெயர்ப்பாளர் ஒருவரின் பங்களிப்பாகும்.

உரைபெயர்ப்பாளர்கள் ஆலோசனைகளை வழங்குவதில்லை. உரைபெயர்ப்பாளர்கள் தேசிய மொ.உ.சே. யின் இயக்குநர் ஒருவரால் அல்லது நீங்கள் தொடர்பாடல் மேற்கொள்ளும் நபரால் வேண்டப்பட்டாலொழிய, வேறு கேள்விகளைக் கேட்கவும் மாட்டார்கள்.

தேசிய மொ.உ.சே. யின் உரைபெயர்ப்பாளர்கள் நன்னடத்தைக் கேவையொன்றின் மூலம் வன்மையாகவே கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளனர்.

- தொழில்முறை நடத்தை
- இரகசியம் பேணுகை
- செயற்திறமை
- பாரபட்சம் இன்மை
- துல்லியத்தன்மை
- தெளிவான பங்களிப்பு வரையறை
- தொழில்முறை உறவுகளை பேணுதல்
- தொழில் ரீதியான முன்னேற்றம்
- தொழில்முறை ஐக்கிய உணர்வு

நன்னடத்தைக் கோவை தொடர்பான மேலதிக தகவல்களுக்கு ‘உரைபெயர்ப்பாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களுக்கான அவுஸ்திரேலிய நிறுவகம்’ (AUSIT) இலிருந்து பெறமுடியும்.

## நான் தேசிய மொ.உ.சே. இற்கான பின்னூட்டலை எவ்வாறு வழங்குவது?

நீங்கள் எமது தேசிய மொ.உ.சே., உரைபெயர்ப்பாளர் அல்லது இயக்குநர் ஒருவரைப்பற்றி பின்னூட்டலை வழங்க விரும்பினால், தயவுசெய்து 131450 எனும் இலக்கத்தோடு தொடர்புகொண்டு தேசிய மொ.உ.சே. இனை அழைக்கவும்.

நீங்கள் ஒரு உரைபெயர்ப்பாளருடன் தொலைபேசி மூலம் தொடர்புபடுத்தப்படும் போதும், தேசிய மொ.உ.சே. க்கான பின்னூட்டலை தெரிவிக்க விரும்பினால் அதனை இயக்குநரிடம் தெரிவிக்கவும். உங்களுடைய பின்னூட்டலானது பதிவு செய்யப்படுவதோடு, அதன் பரிசீலக்காக தேசிய மொ.உ.சே. இலுள்ள சம்பந்தப்பட்ட குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

## நான் ஒரு உரைபெயர்ப்பாளரை மிகவும் வினைத்திறன் மிக்க முறையில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

நீங்கள் தேசிய பொ.உ.சே. யின் மொழிபெயர்ப்பாளர் ஒருவரை பின்வரும் வழிமுறைகளின் மூலம் வினைத்திறன் மிக்க முறையில் பயன்படுத்த முடியும்.

- நீங்கள் தேசிய மொ.உ.சே. இற்கு அழைப்பினை ஏற்படுத்தும் முன்னர் உங்களுடைய அமர்விற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் தயாராக வைத்திருக்கவும்.
- அடுத்த பேச்சினை தொடங்குவதற்கு முன்னர் உரைபெயர்ப்பாளர் தனது முதல் உரைபெயர்ப்பினை முடிக்கும் வரை பொறுமையாக காத்திருக்கவும்.
- குறுகிய வசனநடைப் பிரயோகங்களைப் பயன்படுத்தவும்.
- பேச்சுவழக்கு மொழி மற்றும் கொச்சை மொழிப் பிரயோகங்களைத் தவிர்க்கவும். இவற்றை உரைபெயர்ப்பது கடினமாகவிருக்கக் கூடும்.
- உரைபெயர்ப்பாளரின் பங்களிப்பை உணர்ந்து கொள்ளவும்.
- நீங்கள் உரைபெயர்ப்பாளரிடம் அவரின் ஆலோசனைகளையோ பரிந்துரைகளையோ தெரிவிக்குமாறு கோர வேண்டாம்.
- உரைபெயர்ப்பினை விளங்கிக் கொள்வது உங்களுக்கு கடினமாகவிருப்பின், அதனை உரைபெயர்ப்பாளருக்கு, நிறுவனத்திற்கு அல்லது தேசிய மொ.உ.சே. இற்கு உடனடியாக அறிவிக்கவும்.

## என்னால் தேசிய மொ.உ.சே. யினூடாக ஆவணங்களை மொழிபெயர்த்துப் பெறமுடியுமா?

இல்லை. தேசிய மொ.உ.சே. யானது வர்த்தக ரீதியான மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்குவதில்லை.

குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு திணைக்களமானது தகுதியுடைய அவுஸ்திரேலிய பிரஜாவுரிமையுடையோருக்கும் மற்றும் அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாக குடியேறிய புலம்பெயர்ந்தோருக்கும் இலவசமாக ஆவண மொழிபெயர்ப்பாக்க சேவையை வழங்குகின்றது. இந்தச் சேவை தொடர்பில் அறிந்துகொள்வதற்கு, உங்களுடைய உள்ளூரிலுள்ள 'வயதுவந்த புலம்பெயர்ந்தோருக்கான ஆங்கில நிகழ்ச்சித் திட்டம்' (AMEP) வழங்குநரைத் தொடர்புகொள்ளவும்.

நீங்கள் ஏனைய மொழிபெயர்ப்புத் தெரிவுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு, 'மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புக்கான தேசிய அங்கீகார அதிகாரசபை' (NAATI) ஐத் தொடர்பு கொள்ளவும்.